தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12032026.06

Defense Mechanisms of the Mind in Sangam Literature

Dr.V.Bhuvaneswari*,
Assistant Professor, Department of Tamil,
Erode Sengunthar Engineering College,
Perundurai,Erode District- 638 057.
**Corresponding Author Email: bhuvanaofficial97@gmail.com.*

Article Info
Received on 22-July-2026, Revised on 24- July-2026, Accepted on 25- July-2026, Published on 01-Aug-2026

ABSTRACT

This article describes the psychological defense mechanisms employed by characters in Sangam literature to safeguard their peace of mind and prevent personality breakdown arising from life's frustrations, inner struggles, and anxieties. Defense mechanisms are temporary solutions generated by the unconscious mind to protect the human psyche and alleviate psychological stress. In this paper, psychological concepts are compared alongside evidence from Akam (interior/love) and Puram (exterior/heroic) poems of the Sangam period. Specifically, this study extensively examines how various psychological defense strategies—such as Repression (removing distressing thoughts), Denial (refusing to accept painful truths), Projection (attributing one's sorrow onto nature or other objects), Rationalization (justifying improper actions with excuses), Undoing (seeking atonement for a wrongdoing), Identification (finding satisfaction by aligning with others' achievements), and Sublimation (channeling instinctual energy into socially acceptable avenues)—are manifested in the behavior of Sangam literary characters.
This article establishes that modern psychological theories align remarkably well with the mental struggles and psychological feelings (such as Nothal / distress) of ancient Sangam characters.

Keywords: *Sangam Literature, Defense Mechanisms, Frustration, Repression, Denial, Projection, Rationalization, Undoing, Sublimation.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

சங்க இலக்கியத்தில் உள்ளத்தின் தற்காப்பு முறைகள்

***முனைவர் வி.புவனேஸ்வரி,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி,

பெருந்துறை, ஈரோடு மாவட்டம் -638 057.

ஆய்வுச் சுருக்கம் (Abstract)

சங்க இலக்கிய மாந்தர்களின் வாழ்க்கைச் சூழல்களில் ஏற்படும் மனமுறிவு, போராட்டங்கள் மற்றும் கவலைகளிலிருந்து மன அமைதியையும் ஆளுமைச் சிதைவையும் தற்காத்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் உளவியல் சார்ந்த தற்காப்பு இயங்குமுறைகளை (**Defense Mechanisms**) விவரிப்பதாக இக்கட்டுரை அமைகிறது. மனித அகத்தைப் பாதுகாக்கவும், மன அழுத்தத்தைக் குறைக்கவும் நனவிலி மனதால் (**Unconscious mind**) உருவாக்கப்படும் தற்காலிகத் தீர்வுகளே தற்காப்பு முறைகளாகும்.

இக்கட்டுரையில் சங்க கால அக மற்றும் புறப்பாடல்களின் சான்றுகளுடன் உளவியல் கருத்துக்கள் ஒப்பிடப்பட்டுள்ளன. முக்கியமாக, மன உளைச்சலைத் தரும் எண்ணங்களை அகற்றும் **ஒடுக்கம் (*Repression*)**, கசப்பான உண்மைகளை ஏற்க மறுக்கும் **மறுப்பு (*Denial*)**, தன் துயரத்தை இயற்கை அல்லது பிற பொருள்களின் மீது ஏற்றிப் பார்க்கும் **புறத்தேற்றம் (*Projection*)**, தவறான நடவடிக்கைகளுக்குச் சாக்குப்போக்குக் கூறி நியாயப்படுத்தும் **அறிவார்ந்த விளக்கம் (*Rationalization*)**, தவறுக்குக் கழுவாய் தேடும் **சரி செய்தல் (*Undoing*)**, பிறரின் சாதனைகளுடன் இணைந்து மனநிறைவு கொள்ளும் **ஒன்றுதல் (*Identification*)**, மற்றும் இயல்பூக்கச் சக்தியைச் சமுதாயம் ஏற்கும் நல்வழியில் திருப்புகின்ற **உயர்மடை மாற்றம் (*Sublimation*)** ஆகிய பலதரப்பட்ட உளவியல் தற்காப்பு உத்திகள் சங்க இலக்கியக் கதாபாத்திரங்களின் நடத்தையில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

நவீன உளவியல் கோட்பாடுகள், தொன்மைமிக்க சங்க இலக்கிய மாந்தர்களின் மனப் போராட்டங்களுக்கும், 'நோதல்' போன்ற உளவியல் உணர்வுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தி வருவதை இக்கட்டுரை நிறுவுகிறது.

முக்கியச் சொற்கள்:: சங்க இலக்கியம், உளத்தற்காப்பு முறைகள், மனமுறிவு, ஒடுக்கம், மறுப்பு, புறத்தேற்றம், அறிவார்ந்த விளக்கம், சரி செய்தல், உயர்மடை மாற்றம்

சங்க இலக்கியத்தில் காணலாகும் வாழ்க்கைச் சிக்கல்களால் உள்ள முறிவும், உள்ளப் போராட்டமும் நிகழ்கிறது. இவற்றால் நேரும் ஆளுமைச் சிதைவைத் தவிர்க்க இயலாது. “வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள், ஏமாற்றம், போராட்டம் ஆகியவை ஒருவருக்குத் தம்

| Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

விருப்பங்களை நிறைவேற்றி கொள்ளத் தடையாக இருக்கின்றன. மேலும் அவர் தம்மைப் பற்றித் தாமே தாழ்வாக எண்ணுவதற்கு இவை காரணமாகின்றன"1 என்றும் இச்சமயங்களில் தற்காப்பு இயங்கு முறை செயல்பட தொடங்கி மனிதனின் அகத்தைப் பாதுகாக்கிறது என்று உளவியலாளர்கள் தற்காப்பு இயங்கு முறைகள் உருவாகும் சூழலை விளக்குகின்றனர். தலைவனின் பொருள்வயிற் பிரிவு தவிர்க்க இயலாது என்பதை உணர்ந்தாலும் அவன் திரும்பி வரும் வரை அமைதியுடன் காத்திருத்தலும் தலைவிக்கு உளநலம் தரும் வாழ்வில் நேரும் இடுக்கண்களை உற்றது இதுவென உணரும் திறனும் அதனை எதிர்கொண்டு ஏற்றுப் பொறுக்கும் ஆற்றலும் உளநலத்தைப் பாதுகாக்கும் அடிப்படைத் தேவையாகும்.

உளவியல் நிகழ்ச்சியே தற்காப்பு இயங்கு முறை

ஒரு வகையான நெருப்புக் கோழி அச்சம் மிக்க சூழலில் தன் தலையை மணலுள் புதைத்துக் கொள்ளுமாம். தனக்கு எட்டாத திராட்சைப் பழங்களை நரி இவை புளிக்கும் என எண்ணி விலகுவதாகக் கதை உள்ளது. முதல் நடத்தையை ஒடுக்கம் என்றும், இரண்டாம் நிலையை அறிவார்ந்த விளக்கம் என்றும் உளவிலாளர்கள் கூறுவர். இத்தகைய உளவியல் நடத்தையை மனிதன் மேற்கொள்ளுவதே உளத்தற்காப்பு முறையாகும். மனமுறிவு அனுபவத்தால் நேரும் மனவாட்டத்தைத் தணிப்பதற்கு உதவும் என்று உளவியலார்கள் உரைப்பர். இவ்வியங்கு முறைகள் சில நிமிடங்கள், மணிகள், நாட்கள் எனச் சிறிது காலமே நிலைக்கக் கூடியதாகவும், தன்வரையறைக்கு உட்பட்டதாகவும், தானே அரியத் தக்கதாகவும் திருத்திக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளன. இதனையே நப்பசலையார்,

"கவலை நெஞ்சத் தகவலம் தீர"(நப்பசலையார் புறம் 174 : 22)

என்று ஒரு தற்காலிக மருந்தாகவே இச்செயல் முறைகள் பயன்படுகிறது என்று புறமும் விளக்கும். தற்காப்பு இயங்கு முறை வெற்றியுடன் செயல்பட்டால் கவலை தணிகிறது அல்லது முழுக்கவே தவிர்க்கப் படுகிறது. தோல்வியை மென்மைப்படுத்திக் கொள்ளவும், நன்கு உணரப்பட்ட இசைவின்மையைக் குறைக்கவும், கவலையை ஆற்றுவிக்கவும், உள்ள கிளர்ச்சி சார்ந்த புண்களைச் சரி செய்யவும், போதும் என்ற உணர்வையும், தகுதியும் போற்றிக் காக்கவும் இவ்வியங்குமுறைகள் இன்றியமையாதது. இவ்வுளவியல் நிகழ்ச்சிகளைத் "தன்னைக் காப்பதும் தப்ப விடுவதும் துயர் துடைப்பதுமான"2 உளநுட்ப செயல்கள் என உளவியலாளர் கூறுகிறார். இவற்றைப் பயன்படுத்தாமல் விட்டாலும் உள்ளம் விறைப்பும் அழுத்தமும், இறுக்கமும் உற்றுச் சிதைந்து ஒருமைப்பாட்டை இழந்து விடும். ஓடும் வேண்டியுடன் ஐந்தாம் சக்கரம், இயல்பான சக்கரங்களுள் ஒன்று பழுதாகும் போது உறுதுணையாகி உதவுவது போல உள்ளத்தின் விறைப்பு நிலையில்

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 03 (August-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

உள்ளமே உருவாக்கிக் கொள்ளும் தற்காப்பு இயங்கு முறைகள் பயன்படுகின்றன. எனவே உள்ளம் என்னும் வண்டிக்கு இயங்குமுறைகள் பயன்படுகின்றன. "கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன" (ஔவையார் புறம் 102 :5) என்று புறத்தில் தெளிவுற காணலாம்.

வளர் இளம் பருவமும், தற்காப்பு இயங்கு முறைகளும்

உளத்தற்காப்பு இயங்குமுறைகளின் அடிப்படைக் கூறுகளை வளர் இளம் பருவத்தினருக்கு ஏற்றப்படி கீழ்கண்டவாறு ஒழுக்கம் செய்யலாம். அவையாவன,கவலை, நெருக்கடி மிக்க வாழ்வுச் சூழல்களில் உள்ளம் தற்காப்பு இயங்கு முறைகளை மேற்கொள்ளுகிறது. இவை நனவிலி மனத்தால் உருவாக்கப்படுகின்றன. அதாவது இவற்றை மேற்கொள்ளும் மனிதன் இந்நடத்தைகள் என அறிவதில்லை.இவை இயல்பு நிலை மனிதரிடம் தாற்காலிகமாகச் செயல்படுகின்றன. கவலையும், துயரமும் தணிதலோ தற்காலிகமாகத் தீர்த்தலோ இவற்றின் பயனாகும். இத்தகைய இயங்குமுறைகள் சங்க இலக்கியத்தில் பயின்று வரும் நிலை விளக்கப் பட்டுள்ளது.

ஒடுக்கம்

போராட்டமும், இறுக்கமும் மிக்க சூழல்களில் மனிதர் சிலர் துன்பங்களையோ, குறைபாடுகளையோ இருப்பதாக ஏற்றுக் கொள்ள மறுப்பர். "மனிதர்கள் தங்களுடைய அனுபவங்கள் பயமுள்ளவையாகவோ, வெட்கப்படக் கூடியவையாகவோ இருக்குமானால் அவற்றை மறுத்துவிட வேண்டும் என்கிற மனப்போக்குடையவர்களாக இருக்கின்றனர் என்பது உளவியலின் உண்மையாகும்"3. அச்சுறுத்துவதும், நாணுறச் செய்வதுமான உள்ளத்துடிப்புகள் தோன்றும்போது, அவற்றை உள்ளத்தின் ஆற்றல் மிக்க பிற போக்குகள் எதிர்க்கின்றன. அதன் விளைவாக அத்துடிப்புகள் நினைவு மனத்தினின்று விலக்கப்படுகின்றன. இப்போக்கையே ஒடுக்கம் என்று உளவியலாளர்கள் குறிப்பர்.

"தொல்லைதரும் உள்ளத் துடிப்புகளையும், நினைவுகளையும் திட்டமிட்டு உணர்ந்து கவனத்தில் களத்தின்று அகற்றுவதை அடக்குதல் என்றும், அவற்றை முயற்சி இன்றி இயல்பாக நனவு நிலையின்றி நீக்கப்படுவதை ஒடுக்குதல் என்றும் உளவியல் அறிஞர்கள் உரைத்துள்ளனர்"4. அகம் விரும்பாத கருத்து, பாதிப்பு, உந்துதல் ஆகியவற்றிடமிருந்து நினைவு மனம் பின்வாங்கிக் கொள்ளுகிறது. இதனால் ஒடுக்கப்பட்ட செய்தி நினைவு மனத்துள் இடம் பெறா வண்ணம் தடுத்து நிறுத்தப்படுகிறது அல்லது விலக்கப்படுகிறது எனப் பிரித்தானியக் கலைக் களஞ்சியம் இவ்வுத்தியை விளக்குகிறது. ஒடுக்கம் என்பது கவலையைத் தோற்றுவிக்கும் தூண்டுதல்கள், அவற்றைச் சார்ந்த எண்ணங்கள், கற்பனை உருவங்கள், நினைவுகள், நியாபகங்கள் ஆகியவற்றை அறநிலையிலிருந்து விலக்கத் தன்னியக்கமாகவே நனவிலி மனத்தில் நிறுவப் பெற்றுள்ள ஒரு

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 03 (August-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

போக்காகும் என்பது ஓர் உளவியல் வரையறை என்பர். தற்காலிகமாகக் காத்து கொள்ளுவதற்காக வெளியிட முடியாத கவலைகள், வெளி வந்தும் பயனற்று இருப்பதால் அடக்கப்பட்ட சீற்றங்கள் வெளி வந்ததால் தன்மானத்தைக் குலைக்கலாம். குற்ற உணர்வின் உறுத்தல்கள் ஆகியவை நனவிலி மனத்துள் ஒடுங்கி உள்ளத்துக்கு ஒரு தற்காப்பு ஆகிறது எனலாம். உள்ளத்தின் தற்காப்பு வழியமைப்புகள் ஒடுக்கத்தையே தோற்றுவாய்களாக உடையன. இவ்வுத்தி தோற்கும்போது உள்ளம் பிற தற்காப்பு வழியமைப்புகளை நாடுகிறது. இதுவே தற்காப்பு இயங்கு முறை உத்திகளில் முதன்மையானது; அடிப்படையானது எனலாம். சங்க இலக்கியம் நாடகப் போக்கான தன்னுணர்ச்சிப் பாடல்களைக் கொண்டது. நனவிலி மனத்தால் மனத்துள் ஒடுக்கப்பட்ட செய்திகளையும், ஒடுக்கப்படும் முறைகளையும் பற்றி நினைவு மனத்தோடு பேசியதால் பாடப்பட்ட பாடல்களில் காணுதல் அரியதாகும். எனவே இவ்வுத்தியை வெளிப்படையாகவும், பரவலாகவும் சங்க இலக்கியத்தில் காண இயலவில்லை. நினைவு மன உரைகளில் நனவிலி மனத்துள் ஒடுக்கப்பட்டவைகள் இடம் பெற வாய்ப்பு இல்லை எனினும் ஒடுக்குதல் வேட்கையும், போக்கையும் பற்றி குறிப்புகளைக் காணலாம். தலைவனின் பிரிவையன்றிப் பிற எதையும் நினைக்க இயலாத தலைவியின் நெஞ்சம்,

"உள்ளல் ஆகா உயவு நெஞ்சம்" (உலோச்சனார் நற்.131 :2) என்ற அலர்ப் புலவரின் கூற்றின் வாயிலாக அறியலாம். பிரிவின் துன்பத்தை நினைக்கக் கூடாது. அதனை மறைக்க வேண்டும் என்கிற அடியை தொடர் வலியுறுத்துகிறது.மேலும் இங்கு,

"உள்ளாது ஆற்றல் வலுவோர்"(கபிலர் குறுந் 38 :6)

என்கிற தொடரில் நினையாமல் இருப்பதற்கும் ஆற்றல் வேண்டும் என்னும் கருத்து உள்ளது. இவ்வாற்றால் அறிவு மனத்தின் அடக்குதலை உணர்த்தும். வழக்கமாக இத்தகைய ஒன்றைத்தான் உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்த அல்லது நினையாதிருக்க முயல்கிறோம் என்பது உளவியல் உண்மையாகும். இதனையே,

"உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திரும்பினேம் அளவைத் தன்றே"

என்னும் ஔவையின் தொடரில் நினையாது இருத்தல் என்னும் கருத்து உள்ளது. மனிதர் தம் அளவைத்தன்றி உள்ளாதிருத்தலே ஒடுக்கம் ஆகும்.

ஒடுக்கம் - முழுநிலை

வேள்எவ்வி என்னும் வள்ளல் மார்பிடை வேல் பாய்ந்து பல புண் பெற்றானெனப் புலவர் பிறர் சொல்லக் கேட்டார். வள்ளலிடம் அன்பும், மதிப்பும் கொண்ட புலவரின் உள்ளம் அதிர்ச்சியும்,

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 03 (August-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

அவன் இறப்பானோ என்னும் அச்சமும் கூடிய பெருந்துன்பம் உற்றது. அதனால் அச்செய்தியை,
"பொய்யாகுக கியரோ பொய்யா கியரோ" (வெள்ளெருக்கிலையார் புறம் 233)
தெரிவித்து புலம்புவது போல அமைத்துள்ளது. இப்பாடலின் முதல் நான்கடியில் மூன்று முறை பொய்யாகுக எனக் கூறுவது, அவர் உள்மனத்தின் ஒடுக்குதல் ஆகும். நனவிலி மனதின் வேட்கையையே பொய்யாகுக கியரோ பொய்யா கியரோ என்னும் புலம்பலாகும். ஒடுக்குதலின் உண்மைநிலையைக் காணாமல் கண்களை மூடிக்கொள்கிறோம். உண்மை நிலையை ஏற்க விரும்பாத உள்ளத்தின் ஏக்கமே இப்பாடலாகும்.

மறுப்பு

சேரமான் நெடுஞ்சேரலாதன் முதுகில் நேர்ந்த புறப்புண் நாணி வடக்கிருந்தான் அதனால் " நாள்போல் கழியில் ஞாயிற்றுப் பகலே" (கழாத்தலையார் புறம் 65:12) எனப் புலவன் உணருவது போல அமைந்த பாடலாகும்.சேரலாதன் உயிருடன் இருந்த போது கழிந்து போன நாட்களைப் போல இறந்த பின் உள்ள நாட்கள் கழியவில்லை என்பது கருத்தாகும். மன்னனின் இறப்புக்குப் பின் நிகழ்பவை நாட்கள் அல்ல என்னும் மறுப்புணர்வின் சற்றே மாறிய வெளிப்பாடே "நாள்போல் கழியல" என்னும் தொடராகும். மன்னன் இறக்கவே இல்லையென உள்மனம் நம்புவது மறுப்பு என்னும் தற்காப்பு வழியமைப்பாகும். உண்மையின் சில தொல்லையுறுத்தும் கூறுகளை ஏற்க இயலாமையால் தன்னியக்கமாகவும், தன்னியல்பாகவும் அவற்றை அறநிலையில் இருந்து விலக்குவதே மறுப்பு எனும் உளவியல் கூறு ஆகும்."கழாத்தலையாரின்" பாட்டில் மரணத்தை மறுக்கவில்லை என்றாலும் மரணத்தின் பின் உள்ள நாட்கள், நாட்களே அல்ல என்னும் மறுப்பு உள்ளது. "இனிமையற்ற உண்மைகளைப் புறக்கணிப்பதால் உள்ள இறுக்கத்தை நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளுகிறோம்". அதியமான் மரணமுற்ற கையறு நிலையில், அதியமானின் இல்லமால் கழியும் நாட்கள், நாட்கள் அல்ல என ஔவையார் உணருகிறார்.

"இல்லா கியரோ காலை மாலை அல்லா கியாரயான் வாழு நாளே" (ஔவையார் புறம் 232:1-2) எனப் பாடுகிறார். எங்கு மரணத்தின் உண்மை மறுக்கப் படவில்லை. எனினும் ஒரு வள்ளலின் மரணத்தின் பின்னும் வாழ்வுண்டு; வாழ்நாட்கள் உண்டு என்னும் உண்மை நிலையைக் காண்கிறோம். "நமக்கு உகந்து அமையாத பல வாழ்க்கை உண்மைகளை அவற்றோடு தொடர்பு கொள்ளாது இருப்பதன் மூலமும் அல்லது அவை எல்லை என்று மறுப்பதன் மூலமும் மறைமுகமாகத் தவிர்க்க முடியும் என்பர்"5, இந்த நிலையை தவிர்த்தல் என்பது ஔவையார் பாடல்களின் வழியே கண்டோம். உள்ள இறுக்கத்திற்கு காரணமாக மரணம் என்னும் உண்மை மறுக்கப்படாவிட்டாலும் ஒரு துன்பச் சூழலின் மறுப்பு அல்லது மறுப்பின் விளைவு மாறுபட்ட

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 03 (August-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

மென்மையான வடிவத்தில் உள்ளது.

வளர் இளம் வருவத்தினரும் சங்க உளவியல் கருத்துக்களும்

சங்க இலக்கியத்தில் ஒடுக்கம் என்னும் தற்காப்பு இயங்குமுறை பரவலாக அமையவில்லை என்றும் ஓதலாந்தையாரின் ஒரு பாட்டில் தெளிவுற இவ்வுத்தியை காணலாம் என அறியலாம். ஒடுக்குதல் போக்கின் காரணமாக மறுப்பு உண்மை நிலையைத் தவிர்த்தல் எதிர்மறைவாதம் ஆகியன தோன்றுதலையும், அவை சங்க இலக்கியத்தில் அருவி வழங்கும் இடங்களையும் கண்டோ பிற தற்காப்பு இயங்கு முறைகளின் உதவியை நாடுதல் என்பதி ஒடுக்குதல் உத்தியின் தோல்வியை தொடக்கமாக உள்ளது. இவ்வுத்தி தோற்கத் தொடங்கும் போது கூடுதலாக ஒன்றிரண்டு பிற இயங்கு முறைகள் நாடப்படுகின்றன.

புறத்தேற்றம்

ஒடுக்குதல் போக்கின் காரணமாக மறுப்பு உண்மை நிலையைத் தவிர்த்தல் எதிர்மறைவாதம் ஆகியன தோன்றுதலையும், அவை சங்க இலக்கியத்தில் அருவி வழங்கும் இடங்களையும் கண்டோ பிற தற்காப்பு இயங்கு முறைகளின் உதவியை நாடுதல் என்பதி ஒடுக்குதல் உத்தியின் தோல்வியை தொடக்கமாக உள்ளது. இவ்வுத்தி தோற்கத் தொடங்கும் போது கூடுதலாக ஒன்றிரண்டு பிற இயங்கு முறைகள் நாடப்படுகின்றன. புறத்தேற்றம் என்னும் உளநலத் தற்காப்பு இயங்குமுறைத் தன்னியக்கமாக நனவிலி மனத்தால் தன்னைச் சார்ந்த, ஆனால் கைவிடப்பட்ட மனப்போக்குகளையும், உந்துதல்களையும் புறமுகமாக்கி, வழக்கமாக வேறு மனிதன் அல்லது மனிதர் மேல் ஏற்றிக் கற்பித்துக் கூறுதல் என உளவியல் அறிஞர்கள் தங்களுடைய நூலில் குறிப்பிடுகின்றன. தான் மறுக்க விரும்பும், கைவிட விரும்பும் பண்புகளைப் பிறர்மேல் ஏற்றிக் காணும் முறைமை சங்க இலக்கியத்தில் உள்ளது. நமது எண்ணங்கள் மற்றும் ஆசைகளை பிறர் மேல் ஏற்றிக் கூறும் போது நாம் புறத்தேற்றம் புரிகிறோம். ஒன்றை விரும்பி நினைத்த உடன் உள்ளம் விரும்பிய பொருள்பால் சென்று நிற்பது உள்ளத்தின் இயல்பாகும். “உள்ளிய மருங்கின் உள்ளம் போல”6, என்னும் தொடரில் இவ்வுளவியல் பொருள் உள்ளதை காண்கிறோம்.

இயற்கையும் உணர்வும்

புறத்தேற்றத்தை விளக்கும் உளவியலாளர், “தன்னிடம் உள்ள பண்புகளைப் பிறரிடம் காணும் மனப்பான்மைக்குப் புறத்தெழும் அகக்காட்சியாகும்”7. இதில் கவலைகளும், உணர்ச்சிகளும், சிறப்புக் கூறுகளும் மற்றவர்களின் மீது ஏற்படுகின்றன. இதனை தான்,

“சாத்தன் மாய்ந்த பின்றை முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே” (குடவாயில் கீரத்தனார் புறம் 242:5-6) என்று கீரத்தனார் புறத்தில் உணர்த்துகிறார். இதனை அகத்தில் தலைவனால் வருந்தும்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

தலைவியின் நிலையைத் தோழி ஓர்அருவியின் மேலே ஏற்றி கூறுகிறாள்.

“தம்மோன் கொடுமை நம்வயின் ஏற்றி
நயம்பெரி துடைமையின் தாங்கல் செல்லாது
கண்ணீர் அருவி யாக
அழுமே தோழியவர் பழ முதிர் குன்றே” (அம்மூவனார், குறுந் 163:1-5)

தங்களின் துயரத்தையே அருவியும், குன்றும் காட்டுவதாக தோழி கூறுகிறாள். சங்க இலக்கிய மாந்தர்கள் தங்கள் துயரத்தைக் குன்றம், கடல், அன்றில், குழல், வானம், பறவை, கொடி, மலர் ஆகியவற்றின் மேலே ஏற்றிக் காட்டுகின்றனர். இத்தைய அக மற்றும் புறப்பாடல்களில் உளவியல் தன்மைகள் மிகுந்திருப்பதை அறிய முடிகிறது. துயரத்தைப் புறவயமாக்கிக் காணுதலால் அதனை ஏற்றுச் சந்திக்கும் ஆற்றலும் நேர்க்கின்றன. அவ்வகையில் இக்கூற்றுகள் உளத்தற்காப்பு முறைகள் ஆகிக்கின்றன. சில நேரங்களில் பொருளின் மதிப்புப் பொருளை ஒட்டியதாக அன்றிப் பொருளோடு தொடர்பு கொள்வாரின் உள்ள நிலையை தெரிவிப்பதாக அமைகிறது. “இன்ப துன்பங்கள் பொருள்களிலும், சுழல்நிலையிலும் மட்டும் இல்லை. நுகர்வோரின் மனத்தை ஒட்டி அவை பெரிதும் மாறுகின்றன என்பது நம் மு.வ -வின் கருத்துரையாகும்”8. இதனை அகச்சான்றுகள் வாயிலாகவும், புறச்சான்றுகள் வாயிலாகவும் காணலாம்.

“அன்னாய் வாழிவேன் டன்னைநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டுத்
துவலைக் கூவல் கீழ
மானுன் டெஞ்சிய கலுழி நீரே”

எனக் கூறுகிறாள். மானின் எச்சில் நீர் தேனினும் பாலினும் இனித்தற்குக் காரணம் உள்ளம் தெளிந்தேறிய உடன்போக்கின் இனிமையே ஆகும்.

நிமித்தமும் உணர்வும்

இயல்பான சில நிகழ்ச்சிகளை நன்னிமித்தமாகவோ, தீ நன்னிமித்தமாகவோ கொள்ளும் மரபு சங்க இலக்கியத்தில் உள்ளது. “நிமித்தங்கள் பெரும்பாலும் மனிதமனம் முடிவெடுக்க இயலாத சூழ்நிலைகளில் தோன்றுவனவாகக் காட்சி தருகின்றன”9. நிமித்தங்களைச் சங்க இலக்கியத்தில் புள் நிமித்தம் என்றே கூறுகிறது. மிகப் பழங்காலத்து மனிதன் பறவைகளைப் பார்த்து நிமித்தம் கண்டான் என்றும் இலத்தீன் மொழியில் நல்ல, தீய நிமித்தங்களைக் குறிக்கும் சொல் பறவைகளைக் காணல் என்னும் பொருளில் உள்ளது என்றும், “புள் என்ற சொல்லிற்கு நன்னிமித்தம் என்ற பொருள் சங்க காலத்திலேயே தோன்றியது என்றும் பி.எல் சாமி கூறுகிறார்”.

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 03 (August-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

சங்க இலக்கியத்தில் பறவைகளின் நன்னிமித்தம், தீ நிமித்தம் ஆகிய இரண்டையும் காட்டும் குறிப்புகள் பயின்று வருகின்றன. புறநானூற்றில்,

“புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்”(குறுங்கோழியூர் கிழார் புறம் 20:16)

பறவையின் இரு செயல்களுமே தீய நிமித்தமாக கருதப்படுகிறது.

“அஞ்சுவரத் தகுத புள்ளோர்க்குரல் இயம்பவும்”(கோவூர் கிழார் புறம் 41:7)

“அஞ்சுவரு குரா அல் குரலும் துற்றும்” (மாறேறக்கத்து நப்பசலையார் புறம் 280:5) ஆகிய தொடர்களில் பறவை தீய நிமித்தமாதல் குறிப்பிடப்பட்டுள்ளது.

“புள்ளும் ஓராம்”(கொற்றனார் குறுந் 218:3)

“புலரி விடியல் புள்ளோர்த்துக் கழிமின்”(பெருங்கௌசிகனார் மலைப்படுகாடாம் வரி 44)

“புள்ளுப் புணர்ந் தினிய வாசு” (விற்றுற்று மூதெயினார் அகம் 136:3)

இத்தகைய தொடர்களில் பறவைகளின் நன்னிமித்தம் காட்டப்பட்டுள்ளது. தலைவியைப் பிரிவாற்றும் தோழி தலைவன் வருவான் என்பதை கூறி “புனைவினை நல்லிற் புள்ளும் விலங்கின” எனக் காட்டுகிறாள். வினைமுற்றி வரும் தலைவனும் தலைவிக்கு “நம்வரவினைப் புள்ளறி கொல்லோ” என நினைக்கின்றான். காகத்தின் கரைதல் விருந்து வரவை அறிவுறுத்துகிறது எனக் கொள்ளும் மனநிலை சங்க இலக்கியத்தில் உள்ளது. தலைவியின் பிரிவுத் துன்பம் தொலையும்படி “விருந்துவரக் கரைந்த காக்கை” விருந்து பெறும்படி முழுதாய் விளைந்த வெண்ணெய் சோறு நாளும் ஏழு கலன்களில் தர வேண்டுமெனத் தோழி கருதுகிறாள். உடன்போக்கில் தலைவனொடு சென்றுவிட்ட மகள் திரும்பி வருதலை விழையும் தாய் “வெஞ்சின விறல்வேற் காளையோடு அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே” எனக் காக்கையை வேண்டுகிறாள். இதைப் போல புறநானூற்றில்,

“நெல்நீர் எரித்து விரிச்சி ஓர்க்கும் செம்முது பெண்டு” (மாறோக்கத்து நப்பசலையார் புறம் 280:6-7) இத்தொடரில் விரிச்சி கேட்க்கும் நிலை விளக்கப்படுகிறது. துன்பச் சூழலில் நம்மையை எதிர்பார்த்து ஏங்கும் போது யாரோ யாரிடமோ கூறும் நற்சொல் காதில் விழ அதனைத் தன் எதிர்பார்ப்பிற்கு ஒரு நல்லுறுதியாகக் கொள்ளுதலே விரிச்சி கேட்டல் ஆகும். தன் உள்ளத்தின் எதிர்பார்ப்பு ஆர்வத்தைத் தற்செயலாகக் கேட்ட சொல்லோடு தொடர்பேற்றிப் பொருளை விரிவாக்கம் செய்து கொள்ளும் உள்ள போக்கு விரிச்சி கேட்கும் முறையில் உள்ளது. புறத்தேற்றம் கீழ்காணும் நிலைகளை நடைபெறுகிறது. அவையாவன,

குன்றம்,அருவி,கடல் முதலிய இயற்கைப் பொருள்களிடத்துத் தன் துன்பத்தைக் காணுதல்.ஓர் இடத்திற்கு உரிய இன்ப, துன்ப இயல்புகளை உள்ளவாறே உணராமல் தன் உணர்விற்கு ஏற்ப

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

உணர்தல்.காலத்தின் அளவைக் கூட்டியோ, குறைத்தோ உணர்தல்.மாலை, யாமம், கார், இளவேனில் ஆகிய பொழுதுகளில் துயரத்தை விரிவாக்கம் செய்து காணும் அவற்றிக்கு நோக்கம் கற்பித்தலும் வெளிப்படுத்துகிறது.நாரை, அன்றில் முதலியவைகளும் பூலிலைப் பெண்டும் தன் துன்பத்தை மிகுவிப்பதாகப் பழி கூறல். இயல்பான நிகழ்ச்சிகளை நன்னிமித்தமாகக் கொண்டு ஆறுதல் உறுதல் ஆகிய போக்குகளில் புறத்தேற்றம் என்னும் துயர் தணியும் உள்ள இயல்பு சங்க இலக்கியத்தில் செயல்படுகிறது.

அறிவார்ந்த விளக்கம்

தோல்விகளையும், போராட்டங்களையும், கவலைகளையும் தணித்துக் கொள்ளவும்,தவிர்த்துக் கொள்ளவும் அவற்றின் உண்மையான காரணங்களை உருவாக்கிக் கொள்ளுதல் உள்ளத்தின் இயல்பாகும். இவ்வுளநலத் தற்காப்பு இயங்கு முறையே அறிவார்ந்த விளக்கம் எனப்படும். தேர்வுக்கு தாமதமாக வரும் மாணவன் கல்லூரி மணிகாட்டி விரைந்து ஓடுவதாகத் தனக்கு தானே நம்புவதன்றிப் பிறர்க்கும் கூறுகிறான். இதனால் குற்றவுணர்ச்சியைத் தணித்துக் கொள்ளவும், பிறர் பார்வையில் தான் தாமதமாக வந்தமையை நியாயப் படுத்தி விடவும் முடிகிறது. “அறிவார்ந்த விளக்கம் தருகின்றவர் நம்முடைய செய்கைகளுக்கு தகுந்த காரணங்களைத் தருகின்றனர். அவை உண்மையான காரணங்களை மறைப்பதற்கு உதவுகின்றன. ஏனென்றால் உண்மையான காரணங்களை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டால் கவலை உண்டாகின்றன”10 என்னும் கூற்று இவ்வுத்தியின் நோக்கத்தையும், தேவையையும் விளக்குகிறது.

நரியும் புளித்த திராட்சை கதையை இவ்வுத்திக்கு உரிய சான்றாகப் பலர் குறிப்பிட்டுள்ளனர். நரி தன்னால் பழத்தை எட்டிப் பறிக்க இயலாமையாகிய உண்மையை மறைத்துக் கொண்டு பழங்கள் புளிப்புடையன என்னும் வேறு ஏற்கத் தகுந்த காரணத்தை உருவாக்கிக் கொண்டு பின்வாங்கும்.தோல்வியை நியாயப்படுத்திக் கொல்லுவதால் தனக்கொரு போலி நிறைவையும், பிறர் பார்வையில் தன் மதிப்பை காத்துக் கொள்ளவும் இயல்கின்றது. சாக்குப்போக்காக சொல்லுகின்ற எல்லா நடவடிக்கைகளுமே அறிவார்ந்த விளக்கம் ஆகும்.

வேறு காரணம் கூறுதல்

அன்றாட வாழ்க்கையில் மனிதர்களிடம் நாம் காணுகின்ற அறிவார்ந்த விளக்கம் ஏராளமாக இருக்கிறது என உளவியலாளர்கள் கூறுவர். தலைவி உடன்போக்கு மேற்கோவதற்கு முன்னர் செவிலி தலைவியை இயல்பாக அணைத்தாள். தலைவனை அணைத்த மார்பில் தாயையும் அணைய விரும்பாத தலைவி தனக்கு வியர்க்கிறது என விலகுகிறாள். ஆம்பல் மலரைக் காட்டிலும் குளிர்ச்சியான தலைவிக்கு வியர்க்கிறது எனக் கூறுதல் பொய்யான காரணமே ஆகும். செவிலித்

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

தாயை அணைய விரும்பாமை மறைக்கப்பட்டு வேறு காரணங்களும் கூறப்படுகிறது. இத்தகைய தலைவியின் நடத்தையை, "பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள் இனியந் தேனது துனியா குதலே" என்று அகத்திலும், இதனையே ,

"விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும்,என்னும் உணர்வுடன் அணுகப் பட்டன" (பொருந்திலளங் குமாரனார் புறம் 53:6) புறத்தில் காண்கிறோம். அறிவார்ந்த விளக்கம் என்பது தன் மதிப்பைக் காத்துக் கொள்ளும் விளைவால் உந்தப் பெற்ற தவறானதும் பாதுகாப்பு நல்குவதுமாகிய சிந்தனையாகும். ஏற்க இயலாத மனநிலைகள் நம்பிக்கைகள் நடத்தைகள் உண்மைமைகளைத் தவறாகப் பயன்படுத்தியோ, ஒப்புக் கொள்ளத்தக்க பிழையான எண்ணங்களைக் கண்டு பிடித்தோ நியாயப்படுத்திக் கொள்ளுதல் ஆகும் என்பது உளவியல் உண்மை சங்க அகப் பாடல்களில் பரத்தையின் நடத்தையுடன் ஒப்பிடப்படுகிறது. நமது நடத்தையை அல்லது நம்பிக்கையை நியாயப் படுத்துவதற்குக் காரணங்களை வேட்டையாடும் போதும், பிறர் நம்மிடம் காணும் முரண்பாடுகளை நாம் காணத் தவறும் போதும், நமது நடத்தையின் காரணங்களைப் பிறர் கேள்வி கேட்டால் மனக்கிளர்ச்சி ஆடையும் போது நாம் அறிவார்ந்த விளக்க நடத்தையை மேற்கொள்கிறோம் என உணரலாம் என்பதை உளவியலாளர்கள் கூறுகின்றனர். இம்முன்றியல்பும் கூடிய அறிவார்ந்த விளக்கத்தை மேற்கூறிய கூற்றுகளில் உள்ளது.

வேறு காரணம் கூறி ஆற்றுவித்தல்

கார் காலத்திற்கு முன் வருவதாய்ச் சொன்ன தலைவன் கார்காலம் வந்தும் வரவில்லை. தோழி, "கார்காலம் வருவதற்கு முன்னரே காலமற்ற காலத்து வந்த புதுமலையைக் காரென மதித்துக் கொம்பெல்லாம் மலர்விட்ட கொன்றை மடைமையுடையது" என தலைவியை ஆற்றுவித்தல் அகத்தில் விளக்கப்படுகிறது.

"மடவமன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்த சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை தெரித்தரக்
கொம்புசேர் கொடியினை ரூழ்ந்த
வம்ப மாரியை காரென மதித்தே"

இது உண்மையான கார்காலம் அன்று; தீடீரென வந்த மழைப்பொழிவு எனப் பொய்யாகவும், தோழி தலைவியை ஆற்றுவிப்பாள். எது முழுப் பொய் எனவும், தன் ஆறுதலுக்காகக் கூறப்படுவது எனவும் தலைவியும் அறிவாளாதலின், மரபுப் பொய்யதாதலின் இந்நெறி அகத்திணைச் சான்றோரால் போற்றப்படலாயிற்று என தமிழ்க் காதல் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

Tamilmanam International Research Journal of Tamil Studies *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
Volume 12, Issue 03 (August-2026)
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

தலைவி, பரத்தை ஆகியோர் தங்கள் நடத்தைக்கு உண்மையான காரணத்தை விட்டு வேறு காரணத்தை கூறதலும், தலைவிக்கு ஆறுதல் உரை கூறும் தோழியரின் கூற்றுகளில் உண்மைக் காரணம் விளக்கப்பட்டு வேறு காரணம் கூறுதலும் ஆகிய இருநிலைகளில் அறிவார்ந்த விளக்கம் என்னும் இயங்கு முறை செயல்படுகிறது.

சரி செய்தல்

நெருக்கடியான இடங்களில் ஒருவர் இன்னொருவரைத் தவறுதலாக இடித்துத் தள்ளி விடுதலோ காலை மிதித்து நேரலாம். அந்நிலையில் இடித்தவரோ, மிதித்தவரோ "வருந்துகிறேன்; மன்னிக்க" எனக் கூறுகிறார். பண்பாட்டுப் பதிவுகளுடைய நனவிலி மனம் சடங்கு போல இவற்றைக் கூறச் செய்கிறது. இவ்வாறு கூறாவிட்டால் குற்ற உணர்வு பற்றுகின்றது. தொல்லை செய்கின்றது. மிதிப்பட்டவரும் இத்தகைய ஓரிரு சொற்களைக் கேட்டவுடன் "அதனாலென்ன் பரவாயில்லை" எனக் கூறுகிறார். அவ்வாறு அன்றி மித்தவன் பொருட்படுத்தாமல் போய்விட்டால், "மாடு போல இடிக்கிறான்; மிதிக்கிறான்" என வசைபாடுவார். அறியாமல் இடித்துவிடும்போது உடனே அவசரமாகக் கழுவாய் தேடுதல் போல மன்னிப்புக் கேட்டல், சரி செய்தல் அல்லது துடைத்தழித்தல் என்னும் உளநலத் தற்காப்பு இயங்குமுறைக்குச் சான்றாகும்.

"வலுவாய் மருங்கில் கழுவாயும் உளவென"(ஆலந்தூர் கிழார் புறம் 34:4)

நம்பிச் செயல்படுதல் நடத்தையாகும். ஆலந்தூர் கிழார்களின் புறத்தின் வாயிலாக சரி செய்தல் இயங்கு முறை உளவியலாளர்களால் விளக்கப்படுகிறது. ஏற்புடைமையற்ற எண்ணம், உந்துதல்கள் அல்லது செயல்களை மறத்து விடுதல் அல்லது அவற்றிற்குக் கழுவாய் தேடுதல் முறையில் அமையப் பெறுவதே இவ்வியங்கு முறையாகும். இது ஒருவர் ஒரு சொல்லை எழுத்துப் பிழையோடு எழுதிவிட்ட பின் அழிப்பான் கொண்டு துடைத்துவிட்டுப் புதிதாக எழுதுதல் போன்றதாகும். பிறர்க்குச் செய்த தீமைகளுக்காக மன்னிப்புக் கேட்டல் கழுவாய்க்காகத் தன்னைத் தானே ஒறுத்தல், கழிவிரக்கம் தண்டனைக்குட்படுதல் ஆகியவை சரி செய்தலின் பொதுவான வடிவங்களுள் சில ஆகும் என்று உளவியலாளர் இச்செயல் முறையை விளக்குகின்றனர். ஏற்புடையற்ற நனவிலி மனத்தின் துடிப்புகளால் விளைந்த ஒரு செயல் அல்லது எண்ணத்தை நனவிலி மனத்தாலோயே ஊக்குவிக்கப்பட்ட செயல்களால் செப்பிடு வித்தை போலவும், அறிகுறியாகவும் இருத்தலே சரி செய்தலாகும். இதுவே இவ்வுத்தியின் வரையறையாகும். இத்தகைய வரையறைக்கேற்ற இடங்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது.

பிரிவின் முன் அன்பின் நிகழ்வு

கிள்ளி வளவனின் பகை மன்னர்கள் எரிகொள்ளி வீழ்தல், பன்றி மீது ஊர்தல் முதலிய தீய

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

நிமித்தங்களைக் கனவில் காண்கின்றனர். அதனால் நேரும் அவர்களின் துயரம் "மையல் கொண்ட ஏமமில் இருக்கையர்" என்னும் தொடரில் இடம் பெறுகிறது. அத்துயரை மனைவியருக்கும் மறைக்கின்றனர்.

இதனையே புறத்தில்,

"புதல்வர் பூங்கண் முத்தி" (கோவூர்க் கிழார், புறம் 41:13-14)

என்னும் தொடரில் அவர்கள் போருக்குப் புறப்படும் முன் பிள்ளைகளை முத்தமிடல் கூறப்படுகிறது. இம்முத்தம் அன்பில் கனிந்த முத்தம் அன்று. அச்சத்திலும், கவலையிலும் விளைந்த அன்பான செயலாகும். நேரலாகும் இறுதியழிவை ஏற்க விரும்பாத நனவிலி மனத்தில் தன் மறைவிற்குப் பின்னர் மனைவியும் புதல்வரும் அடைய உள்ள ஆதரவற்ற தனிமைத் துன்பம் பற்றிய அச்சமும், கவலையும் தோன்றுகின்றது. அவற்றை ஓரளவேனும் சரி செய்யவும், ஈடு செய்யவும் முத்தமிடல் செய்கையால் முயலப்படுகிறது.

அன்புரை

உடன்போக்கின் போது இடைவழியில் தலைவன் தலைவியிடம் "அஞ்சுவழி அஞ்சாது அசைவுழி அசைஇ வருந்தாது ஏகுமதி"11 எனக் கூறுகிறாள் வேறு தலைவன் ஊர் அருகே வந்து விட்டால் வேங்கை மலர் சூடி ஓய்வு கொள்ளும் வேளையில், "சுரத்திடை அயர்ச்சியை ஆறுக மடந்தை" எனக் கூறுகின்றாள். இவை அன்புடைத் தலைவன் நெடுவழியில் உடன்வந்த தலைவிக்குக் கூறும் ஆறுதல் உரைகளாகும். கானவிலும் சுரவழியிலும் தலைவியை நடக்க வைக்க நேர்ந்தமை பற்றிய குற்ற உணர்ச்சியைச் சரி செய்து கொள்ளும் போக்கும் இவ்வன்புரைகள் பிறப்பதற்கான உளவியல் காரணத்துள் அடங்கும்.சங்க இலக்கியத்தில் தலைவன் பொருள் முதலான காரணங்களுக்காகத் தலைவியைப் பிரியும் சூழ்நிலைகளில் சரி செய்தல் செயற்பாடு மிகுதியாக உள்ளது. தலைவன் புறக்கடமையா, இன்ப வாழ்வா என்னும் போராட்டத்திற்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. தன் பிரிவை ஏற்றுத் தலைவி வழியனுப்புவாளா என்னும் ஐயமும் உள்ளது. தலைவன் பிரிவால் நேரும் தன் துன்பத்துக்காக மட்டுமின்றித் தலைவிக்கு நேர உள்ள பெருங்கவலையும், நினைத்து வருந்துகிறான். தன் பிரிவால் வாடும் தலைவிக்கு நேரும் இன்னல்கள் தவிர்க்க முடியாதனவாக உள்ளமையால் ஒரு வகையான குற்ற உணர்வும் கலக்கின்றது. ஆகையால் பிரிவிற்கு முன் எப்போதையும் விட கூடுதலான அன்பு வெளிப்பாட்டுச் செயல்களைத் தலைவன் தான் அறியாமலே மேற்கொள்கின்றான். இத்தகைய சூழல்கள் புறப்பாடல்களை விட அகப்பாடலில் அதிகமாகவே காணப்படுகிறது. இருப்பினும் புறத்தின் ஒரு சில சூழ்நிலைகளில் இத்தகைய போக்கு காணப்படுகிறது. உளவியலாளர் கருத்தாவது;

| Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

“ஏற்புடைமையற்ற செயல் அல்லது விளைவு அல்லது எண்ணத்தால் சமன் செய்தல் அல்லது தள்ளுபடி செய்தலே சரி செய்தல் என்னும் உத்தியாகும் என்று உளவியல் விளக்கம் தரப்படுகின்றது”.

பிற உத்திகள்

ஒன்றுதல் என்பது பிற மனிதரிடமே, குழுவினரிடமோ உள அமைப்பில் ஒற்றுமைச் சமநிலை செய்து கொள்ளுதல் ஆகும். “இந்த செயல் முறையின் படி ஒருவன் மற்றோருவனின் சாதனைகளையோ, ஒரு குழுவின் சாதனைகளையோ தன்னுடைய சொந்த சாதனைகளையோ, தன்னுடைய சொந்தச் சாதனைகளாக எடுத்துக் கொண்டு தன்னுடைய மன இறுக்கத்தைத் தளர்த்திக் கொள்ளுகிறான் என உளவியல் அறிஞர்கள் உணர்த்துகின்றனர்”12. உணர்வடிப்படையில் இன்றியமையாத ஒருவரை உண்மையாக அல்லது அடையாள பூர்வமாக இழக்கும் போதும், அவர் தாக்குகிறார் என உண்மையாக அல்லது புனைவு நோக்கில் கருதும் போதும் நேரும் அச்சத்தால் உள்ளப் போராட்டம் ஏற்படுகிறது. இவ்வுள்ள போராட்டத்தைத் தவிர்க்கவும், குறைக்கவும், தன்னியக்கமாகவும், நனவிலிப் போக்கினாலும், அவரது தனித்தன்மைகளையும், பண்புகளையும், சிறப்புக் கூறுகளையும் தனக்கு உரித்தாகப் பாவகை செய்து கொள்ளுதலே ஒன்றுதல் என்னும் தற்காப்பு இயங்கு முறையாகும். வீரவழிபாடு என்பது தெளிவான ஒன்றுதல் வகையாகும் என உளவிலாளர்கள் குறிப்பர். இதனையே,

“என் நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே”(கள்ளி ஆத்திரையனார், புறம் 175:1-2)

எனப் பாடுதலும் நினையத்தக்கது ஆகும்.

உயர்மடை மாற்றம்

உயர்மடை மாற்றம் என்பதை “இயல்பூக்கம் சக்தியை நல்வழியில் பயன்படுமாறு செய்வது”13 என உளவியலாளர்கள் விளக்குவர்.நாகரிக முதிர்ச்சி உறாததும் குழந்தைப் பருவத்திற்கு உரியதுமான நனவிலி மனத்தின் உள் துடிப்புகளை மெல்ல மெல்ல உருவாக்கி வேறு வழித் திருப்பிப் புதிய நடத்தையை உருவாக்கிக் கொள்ளுதலுண்டு. இந்நடத்தை அவர்க்கு மனநிறைவை நல்கும். சமுதாய ஏற்புடைய நடத்தையாகவும் அமையும். இதனையே உயர்மடை மாற்றம் என உளவியலார்கள் கூறுகின்றனர்.

தலைவன் பரத்தையிடம் சென்று வருகிறான். தோழி அவனுக்காக வாயில் வேண்டுகிறாள்.

“நன்மனை நனிவிருந்து அயரும்
கைத்தூவு இன்மையின் எய்தா மாறே”

எனத் தலைவி கூறுகிறாள். தலைவி விருந்தினரை உபசரித்துக் கையொழிமையால் தலைவனை

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

எதிர்ப்படவில்லை; அதனால் ஊடல் கொள்ளவில்லை; அன்றேல் மறுத்திருப்பாள் என்பது பொருளாகும். தலைவனை வெறுத்தும் பரத்தைப் பகைத்தும் தூற்றுதலே இயல்பு உணர்வாகும். அவ்வாறு ஆரவாரம் செய்யாமல் தன இயல்புணர்ச்சிகளை அடக்கி வேறுவழி திருப்பி விருந்து பேணி வருத்தம் மறுக்கும் தலைவியிடம் உயர்மடை மாற்றப் போக்கு உள்ளது. சமுதாய ஏற்புடைய மதிப்புடைய நடத்தைகளாகும். உயர்மடை மாற்றம் என்னும் தற்காப்பு இயங்கு முறை இத்தலைவியரின் செயற்பாட்டில் விளக்கக் காணலாம்.

மனித உள்ளம் பற்றிய தனி அறிவியல் துறை இந்நூற்றாண்டில் உண்மை தான். உள்ளத்தின் போக்குகளும் இயல்புகளும் மனிதன் தோன்றிய காலம் தொட்டு மெல்ல மெல்ல நிலைப்பெற்றதாகும். புறச்சுழல்கள் மாறுகின்றன, பொருள்களும், உணர்வுகளும் மெல்ல மதிப்பிடுப் பெறுகின்றன. ஆனாலும் மனிதனின் இயல்பு உள்துடிப்புகள் அவற்றின் விளைவுகள் முதலியன மாறாமல் இருக்கின்றன. உளவியலின் கொள்கைகள் பெருமளவில், பழமை மிக்க சங்க இலக்கிய மாந்தர்களின் நடத்தைக்கும் பொருந்துகின்றன. உளவியல் கூறுகளான உள்ளப் போராட்டம், உள்ள முறிவு, உள்ள இறுக்கம் முதலியப் பகுதிகள் சங்க இலக்கியத்தில் பயின்று வரும் முறையை விளக்குகிறது. வாழ்க்கைச் சூழல்களில் உள்ளம் தற்காப்பு இயங்கு முறைகளை நாடுகிறது.

உளவியலார் கூறும் உள்ளப் போராட்டத்தின் வகைகள் சங்க இலக்கியத்தோடு பெரும் அளவில் ஒத்துப் போகின்றது. சங்க இலக்கியத்தில் நோதல் என்னும் சொல் உள்ளத்தின் முறிவு, போராட்டம், விறைப்பு நிலை, அழுத்தம், இறுக்கம் ஆகியவற்றை உணர்த்தும் பொது சொல்லாகவே பரவலான இடங்களில் பயில்கிறது.

அடிக்குறிப்புகள்

[1.] 1. முனிர் அஹமத் பரூக்கி, தற்காப்பு இயங்கு முறைகள் கலைக் களஞ்சியம், தொகுதி பத்து, ப.306

[2.] 2. ஜேம்ஸ் டி.பேஜ், பிறழ்நிலை உளவியல், ப.53

[3.] 3. மு.இராசமாணிக்கம் - உளவியல் துறைகள் இரண்டாம் தொகுதி ப.362

[4.] 4. ஜேம்ஸ் டி.பேஜ், பிறழ்நிலை உளவியல், பக்.68 -69

[5.] 5. மேலது ப.72

[6.] 6. வடமோதங் கிழார், அகம் 317 :20

[7.] 7. மு.இராசமாணிக்கம், உளவியல் துறைகள், இரண்டாம் தொகுதி, ப.341

[8.] 8. மு.வரதராசன், குறுந்தொகைச் செல்வம், ப .98

| Copyright © Author(s)

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12032026

[9.] 9. க.காந்தி, தமிழக பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்,ப.262

[10.] 10. மு.இராசமாணிக்கம், உளவியல் துறைகள், இரண்டாம் தொகுதி, ப.340

[11.] 11. அம்மூவனார், நற் 76:4-5

[12.] 12. மு.இராசமாணிக்கம், உளவியல் துறைகள், இரண்டாம் தொகுதி, ப.338

[13.] 13.முனிர் அஹமத் பரூக்கி, தற்காப்பு இயங்கு முறைகள் கலைக் களஞ்சியம்,ப.306- 307

முரண்பாட்டு மெய்ப்பிப்பு அறிக்கை

இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ, மேற்கோள் காட்டப்பட்டுள்ள நூல்களின் தெரிவிலோ அல்லது வெளியிடப்படும் கருத்துகளிலோ ஆசிரியருக்கு எந்தவிதமான தனிப்பட்ட, நிதிசார்ந்த அல்லது தொழில்முறை சார்ந்த நலன் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என உறுதிபட அறிவிக்கப்படுகிறது.

Tamilmanam